## பாளையங்கோட்டை மத்தியசிறை கண்காணிப்பாளர்செயல்முறை ஆணைகள்

முன்னிலை- திரு. கோ.பா. செந்தாமரைக்கண்ணன், பி.இ.,

எண். 3930 / கிசி.2 / 2014 நாள். 23 . 06.2016

பொருள்:- சிறைகள்-மத்தியசிறை, பாளையங்கோட்டை- திரு.மு. செந்தில் முருகன் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டது - பணியை வரன்முறைப் படுத்துவது மற்றும் தகுதிகாண் பருவம் விளம்பல் செய்து ஆணைபிறப்பித்தல் - குறித்து

பார்வை:-
1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண். 793 / PSD-F / 2013, நாள். 16.04.2014.
2) கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணை எண். 5872 / இ.எஸ்.1 / 2013-2, நாள். 12.05.2014.
3) கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணை எண். 5872 / இ.எஸ்.1 / 2013-10, நாள். 12.05.2014.
4) பாளையங்கோட்டை மத்தியசிறை கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை எண். 2671 / பொ.1 / 2013, நாள். 26.05.2016.

-0-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட திரு.மு.செந்தில் முருகன் என்பவர் பார்வை 2ல் காணும் சிறைத்துறை தலைவரின் ஆணைக்கிணங்க திருவைகுண்டம் மாவட்ட சிறையில் கடந்த 26.05.2014 அன்று முற்பகல் தட்டச்சராக பணியில் சேர்ந்தார்.

பார்வை 3ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணையில் தெரிவித்துள்ளவாறு மேற்குறிப்பிட்ட தட்டச்சர் திரு. மு. செந்தில் முருகன் என்பவரது பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் , சென்னை உயர்நிதிமன்றம் / மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்றத்தில் 2007 -2008 முதல் 2012 - 2013 வரையிலான காலத்தில் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் குரூப் -IV க்கான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு 26.05.2014 அன்று முற்பகல் முதல் பணி வரன்முறைபடுத்தி ஆணையிடப்படுகிறது.

மேலும் தட்டச்சர் பதவியில் மேற்படி நபர் நியமனம் செய்யப்பட்ட நாளான 26.05.2014 முற்பகல் முதல் மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணியில் , இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தை கீழ்க்கண்டவாறு முடித்துள்ளார் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| காலம் | வருடம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| 26.05.2014 முதல் 31.05.2014 | -- | -- | 6 |
| 01.06.2014 முதல் 31.12.2014 | -- | 7 | -- |
| 01.01.2015 முதல் 31.12.2015 | 1 | -- | -- |
| 01.01.2016 முதல் 30.04.2016 | -- | 4 | -- |
| 01.05.2016 முதல் 25.05.2016 | -- | -- | 25 |
| | 2 | -- | -- |

எனவே, மேற்குறிப்பிட்ட தட்டச்சர் திரு. மு. செந்தில் முருகன் என்பவர் இரண்டு வருட தகுதி காண் பருவ காலத்தை 25.05.2016 பிற்பகலுடன் முடித்துள்ளதால் 25.05.2016 பிற்பகல் தகுதி காண் பருவத்தை திருப்திகரமாக முடிந்ததாக ஆணையிடப்படுகிறது.

23.6.16

சிறைக்கண்காணிப்பாளர்
மத்தியசிறை,பாளையங்கோட்டை

பெறுநர்
திரு. மு. செந்தில் முருகன், தட்டச்சர், மத்தியசிறை, பாளையங்கோட்டை. பெறு 23-6-2016
நகல் - நி.அ. / அமே
நகல் - பணிப்பதிவேடு / கிசி.2 இ.கோ.